**MCOP. 10 / 2024- PW1 .**

**திரு.சிவசங்கர் த/பெ.முனிராஜ்**

**நாள்:25.09.2025.**

**குறுக்கு விசாரணை 2ம் எதிர் மனுதாரர் தரப்பில் :**

ஹோண்டா இருச்சகர வாகனத்தை நான் தான் ஓட்டி சென்றேன் என்றால் சரி. நான் ஓட்டி சென்ற வாகனத்தில் எனக்கு பின்னால் எனது தம்பி தினேஷ் உட்கார்ந்து வந்தார். அவருக்கு லேசான காயம் தான். நான் நார்ப்பனட்டி கிராமத்தில் இருந்து கெலமங்கலம் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. எனக்கு எதிரே பல்சர் வாகனம் வந்தது என்றால் சரிதான். போலீசில் என் அப்பா புகார் கொடுத்தார். அவர் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அஜாக்கிரதையை மறைத்து என் அப்பா பொய்யாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் தான் வேகமாக சென்று பல்சர் வாகனத்தின் மீது மோதினேன் என்றால் சரியல்ல. விபத்தானது 1வது எதிர்மனுதாரர் ஓட்டுநரால் விபத்து ஏற்படவில்லை என்றும் நான் திடீரென வலது பக்கம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். நான் ஓட்டிசென்ற வாகனத்திற்கு இன்சுரன்ஸ் இல்லை என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட உடன் நான் முதலில் ஓசூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். எனக்கு வலது பக்க காலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அதற்கு ராடு வைக்கப்பட்டுள்ளது. தற்போது அந்த ராடு எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருப்பதால் எனக்கு மருத்துமனை செலவு ஏற்படவில்லை என்றால் சரிதான். நான் காய்கறி மற்றும் பூ வியாபாரம் செய்து வந்தேன். வருமானத்தை காட்டுவதற்கு நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பல்சர் வாகனத்தை ஓட்டிவந்த 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்நர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 1வது எதிர்மனுதாரருக்கு ஓட்நர் உரிமம் இல்லாததால் பாலிசி விதிமீறல் உள்ளதால் 2 வது எதிர் மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றும் இழப்பீடு ஏதாவது பெறவேண்டும் என்றால் நான் 1 எதிர்மனுதாரிடம் தான் கேட்க வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு நான் இந்த வழக்கை 6 மாதத்திற்குள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை 6 மாதத்திற்குள் தாக்கல் செய்யததால் எனக்கு இழப்பீடு கிடைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஓம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.